**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

M.C. No.13/2025

11.11.2025

PW : 2

ஜெயந்தி, க/பெ. சந்துரு

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என் குடும்பத்தில் மூத்த சகோதரி ஆவேன். எனது சகோதரியான மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 2018 ல் திருமணம் நடந்தது. என் சகோதரியை பார்க்க அடிக்கடி அவரது வீட்டில் சென்று பார்க்கும் பழக்கம் இல்லை. அவர்கள் இருவருக்கும் இடையே என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியும். மனுதாரரான எனது சகோதரி திருமணம் நடந்த 10 நாட்களிலேயே அவரது வீட்டை விட்டு சென்றுவிட்டார் என்றால் இல்லை.

எதிர்மனுதாரரின் அம்மா பலமுறை மனுதாரரை எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ அழைத்தும் மனுதாரர் உடன்படவில்லை என்றால் எதிர்மனுதாரரை சேர்ந்த யாரும் வரவில்லை மனுதாரருக்கு திருமணத்தின்போது சீர்வரிசை எதுவும் செய்யவில்லை என்றாலும் 5 ½ பவுன் நகை போட்டதாகவும் 3 லட்ச ரூபாய் தொகை கொடுத்ததாகவும் மனுவில் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 லட்ச ரூபாய்க்கு சீர்வரிசை சாமான்கள் வாங்கிக்கொடுக்கப்பட்டது. எல்லா நகையும் போடப்பட்டது.

மனுதாரர் திருமணத்தின்போது மாப்பிள்ளைக்கு 2 கிராம் மோதிரமும் 1 பவுன் ஜெயினும் போட்டுள்ளார்கள் என்றாலும் பதிலுக்கு 2 கிராம் மோதிரம் போடப்பட்டது என்றால் சரியல்ல. திருமண செலவு செய்வதற்கு மனுதாரர் குடும்பத்திற்கு தகுதியில்லை என்றும் திருமண செலவு முழுவதும் எதிர்மனுதாரரே செய்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் அம்மா மனுதாரரிடம் அடிக்கடி சண்டைபோட்டு எனது சகோதரியான மனுதாரரை விரட்டிவிடுவார்கள் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

LATHA Digitally signed by LATHA Date: 2025.11.11 16:47:53 +0530

மனுதாரருக்கு குழந்தைபிறந்தபோது அவரை பார்ப்பதற்காக எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் வந்தபோது குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்றும் ஊமைபயலுக்கு என்ன குழந்தையை பார்க்கிறது என்று மனுதாரரும் அவரது தரப்பினர் திட்டினார்கள் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே ஊரில் இருமுறை பஞ்சாயத்து பேசப்பட்டு சேர்ந்து வாழ்ந்தும் அதன்பிறகு பஞ்சாயத்தில் மனுதாரர் எதிர்மனுதாரை வேண்டாம் என்று எழுதிக்கொடுத்து தாலியை கழற்றிகொடுத்துவிட்டு மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. சேர்ந்து வாழ்வதாகதான் மனுதாரர் சொன்னார்.

பஞ்சாயத்தில் மனுதாரர் பிறவி ஊனமுடைய எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழமாட்டேன் என்று எழுதிகொடுத்து கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. RJSA என்ற தையல் கடையில் எதிர்மனுதாரர் ஒரு நாளைக்கு ரூ500 சம்பளத்திற்கு வேலைசெய்துவருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு அரசு சார்பில் வழங்கப்படும் மாதம் ரூ1,000/- ஐ கொண்டுதான் எதிர்மனுதாரர் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் உழைத்து சம்பாதிக்கககூடிய நிலையில் இல்லை என்பதால் மனுதாரர் கேட்டுள்ள ஜீவனாம்சம் எதிர்மனுதாரரால் கொடுக்கமுடியாது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2025.11.11 16:47:59 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.